# டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மென்ட் சர்வீசஸ் லிமிடெட்


**பதிவு அலுவலகம்: 3வது தளம், 16, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை 600 017**

TELEPHONE +91 44 24350065, FAX +91 44 24350065 | WEBSITE : www.tcms.bz
E-Mail: Investors@tcms.bz CIN: L74210TN1986PLC012791


## 40வது வருடாந்திர பொதுக் கூட்டம் – மின்னணு வாக்குப் பதிவு குறித்த தகவல் மற்றும் புத்தகம் மூடும் அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம், 2013–ன் அனைத்து பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (MCA) மற்றும் செக்யூரிட்டிஸ் அன்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (SEBI) வெளியிட்ட அனைத்து பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 23 ஜூலை 2026 தேதியிட்ட அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ள வர்த்தக பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்காக, கம்பெனியின் உறுப்பினர்களுக்கான 40–வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) 3 செப்டம்பர் 2026, வியாழக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு காணொளி காட்சி (VC) / இதர ஆடியோ வீடியோ காட்சி (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கம்பெனி/டெபாசிட்டரி/டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள்/பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும், 2025–26 நிதியாண்டுக்கான விளக்க அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பை 28 ஜூலை 2026 அன்று மின்னணு முறையில் கம்பெனி அனுப்பியுள்ளது. 2025–26 நிதியாண்டுக்கான விளக்க அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.tcms.bz–லும், பங்குச் சந்தைகளான பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளங்கள் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com–லும், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) இணையதளம் https://evoting.nsdl.co.in–லும் கிடைக்கும்.

கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 91–ன்படி, வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறுவதையொட்டி **கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்றப் புத்தகங்கள் வெள்ளிக்கிழமை, 28 ஆகஸ்ட் 2026 முதல் வியாழக்கிழமை, 3 செப்டம்பர் 2026 வரை (இரண்டு நாட்களும் உட்பட)** மூடப்பட்டிருக்கும் என்று இதன்மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனிகள் சட்டம் 2013–ன் பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014–ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் விதி 44 ஆகியவற்றின் படி, கம்பெனி அதன் உறுப்பினர்களுக்கு எம்யுஎப்ஜி இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (MIIPL) மூலம் மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்கியுள்ளது. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

**தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடங்கும் தேதி மற்றும் நேரம் :**
**திங்கட்கிழமை, 31 ஆகஸ்ட் 2026 காலை 9.00 மணி.**

**தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடியும் தேதி மற்றும் நேரம் :**
**புதன்கிழமை, 2 செப்டம்பர் 2026 மாலை 5.00 மணி.**

**மின்னணு வாக்குப்பதிவுக்கான தகுதியை நிர்ணயிப்பதற்கான கட்– ஆஃப் தேதி :**
**வியாழக்கிழமை, 27 ஆகஸ்ட் 2026.**

மேற்கூறிய கட்–ஆஃப் தேதியான வியாழக்கிழமை, அதாவது 27 ஆகஸ்ட் 2026 அன்று, உறுப்பினர் பதிவேட்டிலோ அல்லது நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) மற்றும் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) வழங்கிய பலன்பெறும் உரிமையாளர்களின் பட்டியலிலோ பெயர்கள் உள்ள நபர்கள் மட்டுமே அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களில் வாக்களிக்க உரிமை பெறுவார்கள், ஒரு உறுப்பினர் ஒரு தீர்மானத்தின் மீது வாக்களித்த பிறகு, பின்னர் அதை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும். 2 செப்டம்பர் 2026 அன்று மாலை 5.00 மணிக்குப் பிறகு MIIPL ஆல் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடக்கப்படும். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் (AGM) கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்காதவர்கள், வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது MIIPL வழங்கும் மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் வாக்களிக்க முடியும். ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை அனுப்பப்பட்ட பிறகு தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள் அல்லது பங்குகளைப் பெற்றவர்கள் மற்றும் கட்–ஆஃப் தேதியான வியாழக்கிழமை, அதாவது 27 ஆகஸ்ட் 2026 அன்று பங்குகளை வைத்திருப்பவர்கள், வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம்/உருவாக்கலாம். மின்னணு வாக்குப்பதிவுக்கு ஏற்கனவே பதிவுசெய்த ஒருவர், வாக்களிக்க தனது தற்போதைய பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம். ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையைப் பெறுவதற்கான மின்னஞ்சல் ஐடியைப் பதிவு செய்வதற்கான செயல்முறை மற்றும் ஈவுத்தொகையைப் பெறுவதற்கான வங்கிக் கணக்கு விவரங்களைப் புதுப்பிப்பது ஆகியவை வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட ஆவணங்களின் அச்சு நகலை கம்பெனி தனது பங்குதாரர்களுக்கு வழங்காது என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இருப்பினும், பட்டியல் விதிமுறைகளின் (Listing Regulations) விதி 36(1)(b)–ன்படி, கம்பெனியிலோ, எந்தவொரு டெபாசிட்டரியிலோ அல்லது கம்பெனியின் RTA–ஆன எம்யுஎப்ஜி இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (MIIPL)–இடமோ தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பைக் கொண்ட ஆண்டு அறிக்கையின் முழுமையான விவரங்கள் கிடைக்கும் சரியான பாதை (exact path) உள்ளிட்ட இணைய இணைப்பு (web–link) அனுப்பப்படுகிறது.

அதன்படி, 2025–26 நிதியாண்டுக்கான வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு உள்ளிட்ட ஆண்டு அறிக்கையின் முழு விவரங்களும் கிடைக்கும் சரியான பாதை உள்ளிட்ட இணைய இணைப்பு இங்கே வழங்கப்பட்டுள்ளது: http://www.tcms.bz > Investor Relations > Annual Reports.

40–வது வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான மின்னணு வாக்குப்பதிவு செயல்முறை குறித்த தங்களது அறிக்கையை வழங்குவதற்காக, சென்னையைச் சேர்ந்த M/s. லட்சுமி சுப்பிரமணியன் & அசோசியேட்ஸ் (Practicing Company Secretaries) நிறுவனத்தை, கம்பெனி ஆய்வாளராக (Scrutinizer) நியமித்துள்ளது.

ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், உறுப்பினர்கள் https://instavote.linkintime.co.in–ன் பதிவிறக்கப் பிரிவில் உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் உறுப்பினர்களுக்கான மின்னணு வாக்களிப்பு கையேட்டைப் பார்க்கலாம் அல்லது LIIPL–ஐ 022 – 49186000 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது enotices@linkintime.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

குழு உத்தரவுப்படி
**A.V.M. சுந்தரம்**
கம்பெனி செயலாளர் மற்றும் இணக்க அதிகாரி

இடம் : மும்பை
தேதி : 29 ஜூலை, 2026